**யட்டிநுவர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

--------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 17 ஆம் திகதியிலும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆம் திகதியிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து யட்டிநுவர பிரதேசசபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமான கெப் வண்டி மற்றும் 02 டேலர்கள் என்பவற்றின் கூட்டுப்பெறுமதியான ரூபா 345,000 நிலையான சொத்துக்களின் கீழ் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 02 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 501,663 தொகை ரூபா 320,163 எனக் கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 181,500 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய எனினும் 2017 ஆம் ஆண்டின் போது 15 சந்தர்ப்பங்களில் லெுத்தப்பட்ட ரூபா 299,973 செலவினம், மீளாய்வாண்டின் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளுராட்சி அமைச்சினால் சபைக்கு மன்ற பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்கு ரூபா 136,070 தொகையொன்று செலுத்தப்பட வேண்டிய போதிலும்,ரூபா 27,331 என கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் நானாவித கடன்கொடுத்தோர் மீதி ரூபா 108,739 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டுகளின் போது நூலக புத்தகங்கள் கொள்வனவின் போது கிடைத்த கழிவினை குறைத்து நூலகப் புத்தகங்கள் மூலதனமாக்கப்பட்ட தவறினை சீராக்கம் செய்யும் போது குறித்த கழிவு ரூபா 394,659 தொகை நிலையான சொத்துக்களில் சீராக்கப்பட்ட போதிலும் மூலதன ஈடபாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்புக் கணக்கிற்கு சீராக்கப்படாமையால் ரூபா 394,659 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 08 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 70,905,960 ஆக காணப்பட்டதுடன்,அவற்றில் 5 வருட காலத்திற்கு மேற்பட்ட கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,329,351 ஆகவும் 1 இற்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியை விஞ்சியிருந்த கணக்கு மீதிளின் கூட்டுத்தொகை ரூபா 17,446,995 ஆக இருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட 02 கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 46,871,514 ஆக காணப்பட்டதுடன்,அவற்றில் 1 இற்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,699,124 ஆக இருந்தது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

(அ) 13 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 211,639,281 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மோட்டார் வண்டிகள் மற்றும் வண்டில்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 8,570 பெறுமதியான 13 மிதி வண்டிகள் மற்றும் ரூபா 103,700 பெறுமதியான 19 குப்பை வண்டிகள் பௌதீக பரிசோதனைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்களுடன் இணங்காமை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன்இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| (அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டம் (1996 ஆகஸ்ட் 06 ஆம் திகதிய 935/6 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரத்தின் திருத்தப்பட்டதன் பிரகாரம் | |
| 22(i) (ஆ) மற்றும் (ஈ) பந்திகள் | துண்டுகளாக பிரிக்கப்பட்ட வலவேவத்த அன்ட் பார்டி ஒப் தவகேகும்புற என்ற பெயருடைய காணியின் பிரித்தெடுத்தலின் 40 பேர்ச்சிற்கு குறைந்த மற்றும் சபைக்கு ஒதுக்கப்பட்ட 65.6 பேர்ச் இருக்கும் போது 29.9 பேர்ச்சிற்காக 1 பேர்ச் ரூபா 48,906 வீதம் ரூபா 1,462,281 தொகை குறித்த அபிவிருத்தியாளரிடமிருந்து |

| | |
|---|---|
| | பெற்றுக் கொள்ளப்பட்டு பொதுவைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் | |
| i 217 ஆம் விதி | பி.எஸ் 46 மாதிரியின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. |
| ii 218 ஆம் விதி | சபைக்குச் சொந்தமான சகல காணி கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அக்காணி மற்றும் கட்டிடங்களுக்குரிய வேலி எல்லைகள் தயாரிக்கப்பட்டு காணியை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நி.பி 102, 103 மற்றும் 104 | 2003 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வாகன விபத்துக்கள் மற்றும் காணாமல் போன 5 சந்தர்ப்பங்கள் தொடர்பாக, சபைக்குச் சொந்தமான சேதங்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. 3 சேதங்களுக்குரிய முறையான பரிசோதனை நடாத்தப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) சுற்றறிக்கைகள் | |
| i 2016 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 17 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. |
| ii 1994 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | சபைக்குச் சொந்தமான 18 வாகனங்களில் அரச இலட்சிணை பொறிக்கப்பட்டிருக்க வில்லை. |
| iii 2015 யூலை 10 ஆந் திதிய 02/2015(02) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான கைதவிர்க்கப்பட வேண்டிய 7 வாகனங்கள் மற்றும் உழவு இயந்திரம் மற்றும் 4 டிராக்டர் டேலர்கள் 5 ஆண்டு முதல் 23 இற்கு இடைப்பட்ட காலமாக அழிவடைவதற்கு இடமளிக்கப் பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதிசார் விளைவுகள்

------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 40,113,445 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 39,295,516 ஆக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில்ரூபா 817,929 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

---------------------------------

#### 2.2.1 வீதவரியும் வரியும்

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 3,776,011 ஆக இருந்ததுடன், அதில் ஆண்டினுள் ரூபா 1,185,171 அறவிடப்பட்டிருந்தன. ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 3,468,400 ஆக இருந்தது. அதில் ரூபா 2,585,575 அறவிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது நிலுவையிலிருந்தும் பட்டியலிடலிருந்தும் அறவீடுகள் முறையே 31 சதவீதமாகவும் 60 சதவீதமாகவும் இருந்ததுடன், திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 3,473,665 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 5 அரச நிறுவனங்களிடமிருந்து 4 ஆண்டுகளுக்கும் 8 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 783,834 ஆன மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 ஏக்கர் வரி

---------------------

2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 59,870 ஆன ஏக்கர் வரி காணப்பட்டதுடன் அதில் 18 வருடங்களுக்கும் 25 இற்கும் இடைப்பட்ட காலமாக நிலுவையாக இருந்த ரூபா 36,900 அதாவது மொத்த நிலுவையில் 62 சதவீதம் நீண்டகாலமாக நிலுவையாக இருந்து வந்தது.

#### 2.2.3 அறிவித்தல் பதாகை கட்டணங்கள்

-------------------------------------------------------------

1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 52/7 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசித்தப்படுத்தப்பட்ட 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட உப சட்டவிதிக்கோவையின் 39 ஆம் பிரிவில் விளம்பர அறவித்தல் மற்றும் சுற்றாடல் என்ற 1 ஆம் பந்தியின் பிரிவிற்குரியதாக சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அறிவித்தல்களை காட்சிப்படுத்துவதற்காக அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்நியதிகளுக்கு முரணாக அறிவித்தல் பதாதை களுக்காக 13 நிறுவனங்களிடமிருந்து ரூபா 26,700 ஆன கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணம்**

..........................................................................................................

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 800,000 உம் முத்திரைக் கட்டணம் ரூபா 43,575,375 உம் அறவிடப்பட வேண்டியிருந்தன.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

....................................

**3.1. செயலாற்றல்**

------------------

**(அ) சபை நிதியத்திலிருந்து அபிவிருத்தி முன்மொழிவுகளை செயற்படுத்துதல்**

---------------------------------------------------------------------------------------------------------------------பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபை நிதியத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 52 அபிவிருத்தி திட்டங்கள் உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு வருடம் ஆரம்பித்து 6 மாதங்கள் கடந்ததன் பின்னர் 2016 யூன் 16 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த 43 முன்மொழிவுகள் 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதி முதல் 2016 திசெம்பர் 29 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 7 சந்தர்ப்பங்களில் தலைமை அமைச்சரால் அங்கீகரித்து அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அம்முன்மொழிவுகளுக்கு இடையே 7 முன்மொழிவுகள் மாத்திரம் பிரதேச சபையால் செயற்படுத்துவதற்காக ஒப்பந்த சங்கங்களுடன் 2016 திசெம்பர் 30 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2017 ஆம் ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 36 அபிவிருத்தி முன்மொழிவுகளை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையினால் ஒவ்வொரு ஆண்டிற்குரிய சுய வருமான மீட்டல் வருமானத்திலிருந்து 30 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதம் அதிகாரச்சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 87,347,396 ஆன மீண்டெழும் வருமானத்தை உழைத்திருக்கையில் அதில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக எவ்வித பணத்தையும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன் ரூபா 20,000,000 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடுசெய்யப்பட்டிருந்தது.

**(ஆ) பிரதேச சபைகளைப் பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்**

------------------------------------------------------------------------------------------------------------------

பிரதேச சபைகளைப் பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 யூலை 28 ஆந் திகதி மற்றும் 2016 ஒக்தோபர் 17 ஆந் திகதிகளில் ரூபா 3,550,000 பெறுமதியான 4 செயற்திட்டங்கள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதில் 3 செயற்திட்டங்களை மீளாய்வாண்டினுள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையால், பிரதேச சபைகளைப் பலப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் போதியளவு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) பராமரிக்கப்படாத பொது மலசலகூடங்கள்**

பொத்தபிட்டிய, தன்துரே மற்றும் பேராதனை நகரில் அமைந்துள்ள 3 பொது மலசலகூடங்கள் பல வருடங்களாக முறையாக பராமரிக்கப்படாமல் சுகாதாரத்திற்கு பாதகமான வகையில் பேணிச் செல்லப்பட்டிருந்தன.

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) 49-7613 ஆம் இலக்க உழவு இயந்திரம் விபத்திற்குட்பட்டமை**

2011 ஆம் ஆண்டில் 49-7613 ஆம் இலக்க உழவு இயந்திரம் டேலரும் விபத்திற்குட்பட்டதன் பின்னர் எவ்வித திருத் வேலைகளும் செய்யப்படாமல் இயற்கை அழிவுக்கு உள்ளாவதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் 2014 செப்தம்பர் 05 ஆந் திகதி ரூபா 700,000 ஆன காப்புறுதி நட்டத்தை மீள் நிரப்புவதற்கு இணங்கப்பட்டிருந்த போதிலும் 2017 மார்ச் 25 ஆந் திகதி வரையிலும் பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) மனித வள முகாமைத்துவம்**

2016 ஒக்தோபர் 11 ஆந் திகதியில் உள்ளவாறு 3 பதவிகளில் 3 வெற்றிடங்களும் 4 பதவிகளில் 7 மிகைகளும் காணப்பட்டன.

**(இ) ஆயுர்வேத சிகிச்சை நிலையம்**

சபைக்குச் சொந்தமான 12 ஆயுர்வேத சிகிச்சை நிலையங்களுக்கு வைத்திய வசதிகளை வழங்குவதற்காக ரூபா 1,100,000 சபை நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 47 சதவீதமாக இருந்ததுடன் அபில்மீகம ஆயுர்வேத நிலையத்திற்கு போதியளவில் மருந்துகள் வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) பொது வைப்புக்கள்**

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறு நானாவித வைப்புகளின் கீழ் ரூபா 7,550,424 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன் 2014 ஆம் ஆண்டின் போது 14 சந்தர்ப்பங்களிலும் 2015 ஆம் ஆண்டில் 42 சந்தர்ப்பங்களில் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிர்மாண ஒப்பந்தங்களுக்காகன நிறுத்தி வைத்தல்கள் முறையே ரூபா 2,281,375 மற்றும் ரூபா 796,658 ஆன உடன்படிக்கை காலம் முடிவடைந்ததன் பின்னர் உரிய ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்துவதற்கோ அல்லது பராமரிக்கப்பட வேண்டிய நிர்மாண வேலைகள் இருந்தால் அதற்காக ஈடுபடுத்தவோ நடவடிக்கை எடுக்கப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ii) முன்னைய ஆண்டில் கழிவுப்பொருட்களை வெளியேற்றுதல், தேர்தல்கள் படிகள், ஊழியர் பிணை, இடர் கடன் அறவீடு மற்றும் களியாட்டவரி போன்ற விடயங்களின் கீழ் 10 சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த ரூபா 104,698 தொகை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது

(iii) மீளாய்வாண்டின் போது காணி பிரித்தெடுத்தல் நடவடிக்கைகளின் போது பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிப் பகுதிக்காக 3 சந்தர்ப்பங்களின் போது சபைக்கு கிடைத்த ரூபா 1,489,101 தொகை காணியின் பொது நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**(உ) காணியின் உரித்தை கையேற்காமை**

(i) காணிகளை துண்டாக்கி விற்பனை செய்யும் போது உரிய காணியில் சபைக்கு உரித்தான காணிகளின் உரித்து பிரதேச சபையின் பெயருக்கு கையேற்கப்பட வேண்டிய போதிலும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 375,000 பெறுமதியான 71 பேர்ச் அளவிலான 3 உறுதிகள் சபையின் தலைவர் / செயலாளர் என உத்தியோகபூர்வ பெயர்களில் எழுதப்பட்டிருந்தன.

(ii) 7 மயானங்களின் உரித்தினைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 35 மயானங்களுக்கு வேலி எல்லை அமைக்கப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

கட்டாய ஓய்வூ செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்தும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 261,369 ஆன ஊழியர் கடன் மீதியினை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையால் உற்பத்தி செய்யப்படுகின்ற சேதனப் பசளை கழிவுப்பொருள் சலிக்கும் இயந்திரமொன்றின் மூலம் சலிக்கப்படல் இடம்பெறாதிருந்ததால் முறையான சேதனப்பசளை உற்பத்தி செய்வதற்கு இயலுமை மட்டுப்படுத்தப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் உற்பத்தி பெய்யப்பட்ட 300 தொன் அளவு சேதனப் பசளை மாத்திரம் பயன்படுத்தப்படாமல் கிரிமட்டியாவ கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் திறந்த வெளயில் இயற்கை அழிவிற்கு உட்பட்டு காணப்பட்டன.

(ஆ) கழிவுப்பொருள் செயற்திட்டத்திற்காக 2016 ஒக்தோபர் 07 ஆந் திகதி வரையிலும் ரூபா 99,900 ஆன கிருமி நாசினி மருந்துகள் பயன்படுத்தியிருந்த போதிலும் நிலையப் பரிசோதனையின் போது அதிகளவில் பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) பேராதனை முதல் கன்னொருவ வரை வீதிக்கு சமாந்திரமாக செல்லும் மஹவலி கங்கை ஓரத்திலும் அதற்கு அண்மித்த வனாந்திரத்திற்கும் வீடுகளிலிருந்தும் வியாபார நிலையங்களிலிருந்தும் கழிவுப்பொருள் மற்றும் கழிவுநீர் வெளியேற்றப்படுவது 2016 ஒக்தோபர் 07 ஆந் திகதிய நிலையப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டினுள் வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கிடையே நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்த பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான 25 வருமான விடயங்களில் 13 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலும் 43 செலவின விடயங்களில் 12 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான கருத்திற் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 24 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 6,737,000 ஆன மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(இ) 8 வருமான விடயங்களில் ரூபா 963,600 ஆன மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகளில் வருமானம் எதுவும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக முன்னைய ஆண்டின் போது அபிவிருத்தி முன்மொழிவுகளைப் பெற்று முன்னுரிமை தயாரிக்கப்பட்டு எதிர்வரும் ஆண்டில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களுக்காக முறைப்படிமதிப்பீட்டைப் பெற்று அம்மதிப்பீட்டுப் பெறுமதியின் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமல் ரூபா 20,000,000 அண்ணளவான பெறுமதியொன்றை இட்டு சபை நிதியத்திற்காக மூலதன செலவின மதிப்பீட தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றப்பட்டிருந்தது.

**4.2 சொத்து முகாமைத்துவம்**

**பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாடுள்ள சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரமொன்று 7 ஆண்டுகளாக விளைவற்ற காணப்பட்டது.

**4.3 கூட்டிணைந்த திட்டம்**

மீளாய்வாண்டினை மேவுகை செய்யும் வகையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீது விசேட கவனம் கோரப்படல் வேண்டும்.

(அ) ஒப்பந்த நிர்வாகம்
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்